# திருக்கண்ணார்கோயில் திருப்பதிகம்

THAN[illegible]
29 DEC 1986

அமரர் [illegible] அருணாசல முதலியார்
அவர்களின் [illegible] அன்புடன்
அளிப்பது

திருமதி சியாமளா அருணாசலம்
(1982) சீர்காழி.



சம்பந்தர்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உரு-வது மகாசந்நிதானம்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

வெளியீடு எண் 113.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

# குறுமாணக்குடி என்னும் திருக்கண்ணார்கோயில் திருப்பதிகம்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

உடு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1946

பிரதிகள் 500

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

உ

குருபாதம்

# முகவுரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் உடுவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சி ஏற்றது முதல் வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் ஆற்றிவரும் பணிகள் அளவில. அவைகளுள், சைவத் தெய்வத் தமிழ்மறைகளை சைவ சமயிகள் யாவரும் ஓதி உய்ந்து இன்புற வேண்டும் என்பதற்காக அந்தந்தத் தலத்தேவாரப் பதிகங்களைத் தனித் தனியே சிறு சிறு புத்தகமாக அச்சிடுவித்து அன்பர்கட்கு வழங்குதலும் ஒன்று. ஆதலின் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி முதற்கண் திருமுறைகள் கண்ட தலமாகிய சிதம்பரம் தொடங்கி முறையே இதுகாறும் திருவேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை, திருநாரையூர், ஆச்சாள்புரம், திருமயேந்திரப்பள்ளி, புள்ளிருக்குவேளூர், திருத்

துருத்தி, திருமங்கலக்குடி, திருக்கோளிலி, திருக் கடவூர், தென் திருமுல்லைவாயில், திருக்கலிக்காமூர், திருநெல்வேலி, சீகாழி, திருக்கோலக்கா, திருக் குருகாவூர், திருச்சாய்க்காடு, திருப்பல்லவனீச்சரம், கீழைத்திருக்காட்டுப்பள்ளி, திருவெண்காடு ஆகிய தலங்களில் அபிஷேக ஆராதனை செய்து அவ்வத் தலத் திருப்பதிகங்கள் அடங்கிய நூல்களும் ஆங் காங்கு அன்பர்கட்கு வழங்கப்பெற்றன. அம் முறைப்படி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் மாத ஜன்மநக்ஷத்திர நன்னாளாகிய வியஆண்டு வைகாசித்திங்கள் உஎ-ம் நாள் இத் தலத்தில் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை செய்வித்துத் தலப் பதிகத்தை ஓதுவித்து, திருக்கண்ணார் கோயில் திருப்பதிகம் என்னும் இந்நூலும் வழங்கப்பெறுகிறது. அன்பர்கள் பாராயணஞ் செய்து ஸ்ரீ கண்ணாயிரநாதர் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று உய்வார்களாக.

சிவமயம்

## தலச்சிறப்பு

சீகாழிப் பதியிலே திருவவதாரஞ் செய்தருளிய ஞானசம்பந்த பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப்பதிகங்கள் மட்டும் பெற்றதலங்கள் நூற்றுப்பத் தென்று ஆன்றோர்களால் அறுதியிடப் பட்டிருக்கின்றது. அவைகளுள் ஒன்று திருக்கண்ணார்கோயில் என்னும் இத்திருத்தலம். சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், ஆகிய மூவர்கள் பாடல்களைத் தனித்தும் சேர்த்தும் பெற்று விளங்கும் தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கெனக் கணக்கிட்ட ஸ்ரீமத் உமாபதி சிவாசாரியர் இதனைப் பதினேழாவது திருத்தலமாக எடுத்துள்ளார்கள். இக்காலத்து குறுமாணக்குடி என வழங்கப்பெறுகிறது. இறைவன் திருநாமம் ஸ்ரீ கண்ணாயிரநாதர். இறைவி திருநாமம் முருகுவளர்கோதை.

கௌதமமுனிவர் பத்தினியாகிய அகலிகையின் அழகினை நாரதர் வாயிலாகக்கேட்டு

அறிந்த இந்திரன் அவள்மீது தணியாக் காதல்கொண்டவனாய் இருப்பிடத்தை விட்டகன்று கெளதமர் வேடம் பூண்டு முனிவர் பர்ணசாலையை யடைந்தான். அடையச் சற்றுமுன்னர் முனிவர் நித்திய கடன்களைச் செய்துமுடிக்கும்பொருட்டு வெளியே சென்றிருந்ததால் இந்திரன் இதுவே தக்க சமயம் என்று கருதி உள்புகுந்தான். அமளியை யடைந்தான். 'பாவாய்! காம மயக்கத்தால் வாடுகிறேன். வாட்டத்தைத் தவிர்' என்றான். கணவர்சொற் றவறாத பத்தினியாரும் உண்மையறியாது, இவர் தமது நாயகரே என்று எண்ணி, கருத்தை முற்றுவித்தனர். ஆயினும் சிற்சில செயல்களால் பின்னரே உண்மை தெரியலாயிற்று. இதற்குள் வெளியே சென்றிருந்த முனிவரும் வந்துவிட்டார். மனைவிகூற நடந்தது அறிந்தார். அவ்வளவு தான். "குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேனும் காத்தலரிது" என்பது பொய்யாகுமோ? கோபம் எழுந்தது. இந்திரனுக்குச் சாபமும் ஏற்பட்டது. சாபத்தினைப் பெற்று, பெருமையிழந்த தமது தலைவனுக்காகத் தேவர்களெல்லாரும் இத்தலத்

துக்குவந்து பெருமானை வழிபட்டு "இறைவனே! எங்கள் தலைவனுக்குற்ற சாபம் நீங்க வேண்டும்" என்று பிரார்த்திக்க அவ்வாறே இறைவனும் அருள் புரிந்தான். இந்திரனும் தனது உடலிலுள்ள குறிகள் முழுதும் கண்களாக மாறியிருப்பதைக் கண்டு மகிழ்வுற்றான். இவ்வரலாறு ஏழாவது திருப்பாடலிற் காணலாம். ஆலயம் மிகச் சிறிதாகவும், அழகாகவும் விளங்குகிறது.

வைத்தீஸ்வரன்கோயில் புகைவண்டி நிலையத்தில் இறங்கி மாயூரம் செல்லும் கற்சாலை வழியாக மூன்றுகல் தூரம் சென்று கதிராமங்கலத்தை யடைந்து ஆங்கிருந்து கிழக்கே அரைகல் தூரம் சென்றால் இத்தலத்தை யடையலாம்.

## தலப்பதிகக் குறிப்பு

மண்ணியாற்றின் வளப்பம் நிறைந்தது. அவ்வாற்றில் வருகின்ற நீர் சந்தனம், அகில், முத்து முதலியவைகளை உடன்கொண்டு வருகின்றது. சோலைகளில் குரங்குகள் ஆட வண்டுகள் இசையினை எழுப்புகின்றன. முல்லைக்கொடிகளும் மல்லிகைக்கொடிகளும்

ஒன்றோடொன்று இணைந்து மணம் வீசுகின்றன. இத்தகைய சிறப்புடைய தலத்தைக் கைகூப்பி வணங்குவார்கட்கு இடர் சாராது; நல்வினை நணுகும். இயமவாதனை கிடையாது. தலப்பெயரை உச்சரிப்பவர்கள் சிவலோகம் சார்வார்கள்.

**வரலாறுகள்:-** நான்காம் திருப்பாடலில் இறைவன் அம்மையாரஞ்ச யானையை உரித்த வரலாறும், சனகாதியர்கட்கு ஆல நிழற் கீழிருந்து உபதேசித்த வரலாறும், ஐந்தாவது திருப்பாடலில் சிறுவடிவொடு மாவலிபாற் சென்று மூவடி நிலம் வேண்டி உலக முழுதும் அளந்துகொண்ட திருமால் இறைவனை வழிபட்ட வரலாறும், ஏழாவது திருப்பாடலில் இத்தலத்திறைவன் இந்திரனுக்கு அருள்பாலித்த வரலாறும், எட்டாவது திருப்பாடலில இராவணன் கயிலையை எடுப்பேனென்று இறுமாந்து எடுக்க நெருக்குண்டு இன்றவனடியை நெஞ்சகத்து இருத்த, கருணைக்கடலாகிய இறைவன் கனிந்து ஒளி பொருந்திய வாளையும், அவனிடமிருந்து பறித்த புட்பகத் தேரையும் கொடுத்தருளிய வரலாறும் அறிவிக்கப்படுகின்றன.

உ

சிவமயம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

## பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

தண்ணார் திங்கட் பொங்கரவந் தாழ் புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகுமே. 1

கந்தமார்சந்துங் காரகிலுந்தண் கதிர்முத்தும்
வந்தமர்தெண்ணீர் மண்ணிவளஞ்சேர் வயன்மண்டிக்
கொந்தலர்சோலைக் கோகிலமாடக் குளிர்வண்டு
செந்திசைபாடுஞ் சீர்திகழ்கண்ணார் கோயிலே. 2

பல்லியல்பாணிப் பாரிடமேத்தப் படுகானின்
எல்லிநடஞ்செய் யீசனெம்மான் றன் னிடமென்பர்
கொல்லையின்முல்லை மல்லிகைமௌவற் கொடிபின்னிக்
கல்லியலிஞ்சி மஞ்சமர்கண்ணார் கோயிலே. 3

தருவளர்கானந் தங்கியதுங்கப் பெருவேழம்
மருவளர்கோதை யஞ்சவுரித்து மறைநால்வர்க்
குருவளரால நீழலமர்ந்தீங் குரைசெய்தார்
கருவளர்கண்ணார் கோயிலடைந்தோர் கற்றோரே. 4

மறுமாணுருவாய் மற்றிணையின்றி வானோரைச்
செறுமாவலிபாற் சென்றுலகெல்லா மளவிட்ட
குறுமாணுருவன் றற்குறியாகக் கொண்டாடும்
கறுமாகண்டன் மேயதுகண்ணார் கோயிலே. 5

விண்ணவருக்காய் வேலையுணஞ்சம் விருப்பாக
உண்ணவனைத்தேவர்க்கமுதீந்தெவ் வுலகிற்கும்
கண்ணவனைக்கண் ணார்திகழ்கோயிற் கனிதன்னை
நண்ணவல்லோர்கட் கில்லைநமன்பா னடலையே. 6

முன்னொருகாலத் திந்திரனுற்ற முனிசாபம்
பின்னொருநாளவ் விண்ணவரேத்தப் பெயர்வெய்தித்
தன்னருளாற்கண் ணாயிரமீந்தோன் சார்பென்பர்
கன்னியர்நாளுந் துன்னமர்கண்ணார் கோயிலே. 7

பெருக்கெண்ணாத பேதையரக்கன் வரைக்கீழால்
நெருக்குண்ணாத்தன் னீள்கழனெஞ்சி னினைந்தேத்த
முருக்குண்ணாதோர் மொய்கதிர்வாட்டேர் முன்னீந்த
திருக்கண்ணாரென் பார்சிவலோகஞ் சேர்வாரே. 8

செங்கமலப்போ திற்றிகழ்செல்வன் றிருமாலும்
அங்கமலக்கண் ணோக்கரும்வண்ணத் தழலானான்
தங்கமலக்கண் ணார்திகழ்கோயி றமதுள்ளம்
அங்கமலத்தோ டேத்திடவண்டத் தமர்வாரே. 9

தாறிடுபெண்ணைத் தட்டுடையாருந் தாமுண்ணும்
சோறுடையார்சொற் றேறன்மின்வெண்ணூல்சேர்மார்பன்
ஏறுடையன்பர னென்பணிவானீள் சடைமேலோர்
ஆறுடையண்ணல் சேர்வதுகண்ணார் கோயிலே. 10

காமருகண்ணார் கோயிலுளானைக் கடல்சூழ்ந்த
பூமருசோலைப் பொன்னியன்மாடப் புகலிக்கோன்
நாமருதொன்மைத் தன்மையுண்ஞான சம்பந்தன்
பாமருபாடல் பத்தும்வல்லார்மேற் பழிபோமே. 11

திருச்சிற்றம்பலம்.